ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2235/22 - 2021 ජූලි මස 06 වැනි අඟහරුවාදා - 2021.07.06

*2235/22 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டு செலாவணிச் சட்டம்

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

*கொழும்பு 01,*
*2021, யூலை 06.*

**ஒழுங்குவிதிகள்**

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021, பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதியிடப்பட்ட 2213/35 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரினால் இலங்கையில் பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல் வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.*

*(1) ஒழுங்குவிதிகளின் அட்டவணையின் பகுதி I இன் அ தலைப்பின் கீழ் 1 ஆம் பந்தியின் துணைப்பந்தி (8) இன் விடயம் 'எ' இத்தால் இரத்துச் செய்யப்பட்டு பின்வரும் விடயம் பதிலீடு செய்யப்படுகிறது :-*

*(எ) "கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட இலங்கை ரூபாவில் அமைந்த படுகடன் பிணையங்கள்".*

1A - PG 5488 — 470 (2021/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) ஒழுங்குவிதிகளின் அட்டவணையின் பகுதி I இன் அ தலைப்பின் கீழ் 1 ஆம் பந்தியின் துணைப்பந்தி (8) இன் விடயம் 'ஏ' ஆகப் பின்வரும் விடயம் உட்புகுத்தப்படுகிறது :-

(ஏ) "கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலமைந்த படுகடன் பிணையங்கள்".

(3) ஒழுங்குவிதிகளின் அட்டவணையின் பகுதி I இன் அ தலைப்பின் கீழ் 1 ஆம் பந்தியின் (11) ஆம் துணைப்பந்தியாகப் பின்வரும் விடயம் உட்புகுத்தப்படுகிறது :-

(11) "அட்டவணையின் இப்பகுதியின் அ தலைப்பின் கீழ் 7 ஆம் மற்றும் 8 ஆம் பந்திகளில் கூறப்பட்ட விலக்கல்களுக்கும் வரையறைகளுக்கும் அமைய 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளினால் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டு வழங்கப்பட்ட (பங்குகளுக்கு அல்லது பங்குகளுக்கு மாற்றல் செய்வதற்கான உரித்துடமையொன்றின் கீழான பங்குகள் உட்பட) ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களிலுள்ள பங்குகளின் அனைத்து வகுப்புக்களையும் கொள்வதற்கு, உடமையில் வைத்திருப்பதற்கு அல்லது உரிமை துறப்பதற்கு".

(4) பின்வரும் பந்தியானது, ஒழுங்குவிதிகளின் அட்டவணையினது பகுதி I இன் அ தலைப்பின் கீழ் 4 ஆம் பந்தியினது (9) ஆம் துணைப்பந்தியாக உட்புகுத்தப்படுகிறது :-

(9) "எந்தவொரு சூழ்நிலைகளின் கீழும், அட்டவணையின் பகுதி I இன் அ தலைப்பின் கீழ் 1 ஆம் பந்தியின் (8) ஆம் துணைப்பந்தியின் விடயம் 'ஏ' இன் மற்றும் (11) ஆம் துணைப் பந்திகளின் கீழ் இலங்கையிலுள்ள கம்பனிகளினால் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்பட்ட குறிப்பிடப்பட்டவாறான பட்டியலிடப்பட்ட பங்குகளை அல்லது பட்டியலிடப்பட்ட படுகடன் பிணையங்களை உள்முக முதலீட்டுக் கணக்குகளூடாக அத்தகைய முதலீடுகளைச் செய்கின்றவர்களும் இலங்கையில் வதிகின்றவர்களுமான இலங்கையரல்லாதவர்கள் நீங்கலாக இலங்கையில் வதியும் எந்தவொரு ஆளுக்கும் விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது".

(5) ஒழுங்குவிதிகளின் அட்டவணையினது பகுதி I இன் 4 ஆம் பந்தியின் (10) ஆம் துணைப்பந்தியாக பின்வருவன உட்புகுத்தப்படுகிறது :-

(10) "ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் பட்டியலிடப்பட்ட பங்குகள் மற்றும் பட்டியலிடப்பட்ட படுகடன் பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் தொடர்பில் மேலும் நிபந்தனைகள் பிரயோகிக்கப்படுகின்றன.

(அ) கம்பனியானது, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்படுவதற்கு உடனடியாக முற்போந்த மூன்றாண்டு காலப்பகுதிக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களின்படி கம்பனியின் மொத்த ஆண்டு வருமானத்தில் குறைந்தபட்சம் 50% இனை வெளிநாட்டுச் செலாவணி வருவாயாக அதாவது குறைந்தபட்சம் ஐ. அ. டொலர் 5 மில்லியனுக்குச் சமமான தொகையினை தொடர்ச்சியாக ஈட்டுகின்றதொன்றாக இருத்தல் வேண்டும் (அதாவது முதலீட்டைப் பெறுபவர்). இவ்வொழுங்குவிதிகளின் கீழ் அவ்வாறு தகைமையுடைய முதலீட்டைப் பெறுபவர் அதே மட்டத்தில் வெளிநாட்டுச் செலாவணியினை உழைக்கத்தக்க வாய்ப்பினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) வதிவற்ற முதலீட்டாளரொருவரின் உள்முக முதலீட்டுக் கணக்கினூடாகப் பெறப்பட்ட ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்பட்ட பட்டியலிடப்பட்ட பங்குகளின் முதலீட்டுத் தொகையானது, மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்குட்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருடன் முதலீட்டினைப் பெறுபவரினால் திறக்கப்பட்டு பேணப்பட்டு வரும் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வரவு வைக்கப்படல் வேண்டும்.

(இ) மேலேயுள்ள 10 ஆவது துணைப் பந்தியின் விடயம் (ஆ) இன் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட பெறுகைகளில் 60% இற்குச் சமமானதொரு தொகையினை, முதலீட்டினைப் பெறுபவர் இலங்கைக்கு வெளியே ஏதேனும் மூலதனக் கொடுக்கல் வாங்கல்களுக்குப் பயன்படுத்தலாம்.

(ஈ) முதலீட்டினைப் பெறுபவர், இவ்வொழுங்குவிதியில் அனுமதிக்கப்பட்டவாறு, சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கினூடாகச் செய்யப்பட்ட குறிப்பிடப்பட்ட முதலீடுகளின் ஏதேனும் வருமானத்தினை அல்லது மூலதனப் பெறுகைகளை, இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்குட்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட

வணிகருடன் முதலீட்டினைப் பெறுபவரினால் திறந்து பேணப்படுகின்ற எந்த சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கினூடாக முதலீடு செய்யப்பட்டதோ அதே கணக்கிற்கு கொடுப்பனவு பெறப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் இலங்கைக்கு அனுப்பி வைக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(உ) அவ்வாறு பெறப்பட்ட பெறுகைகளின் மூலதன நன்மைகளில் 50% இற்குச் சமமான தொகையொன்றினை இலங்கைக்கு வெளியே ஏதேனும் மூலதனக் கொடுக்கல் வாங்கல்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்காக விசேட வெளிநாட்டு நாணயக் கணக்கினூடாக அனுப்பி வைக்கலாம். அத்தகைய தொடரும் முதலீடுகளில் ஏதேனும் வருமானம் அல்லது மூலதனப் பெறுகைகளும் கூட, மேலுள்ள துணைப் பந்தி (10) இன் விடயம் (ஈ) இன் கீழான நிபந்தனைக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(ஊ) வதிவற்ற முதலீட்டாளரொருவரின் உள்முக முதலீட்டுக் கணக்கினூடாகப் பெறப்பட்ட ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்பட்ட பட்டியலிடப்பட்ட படுகடன் பிணையங்களின் முதலீட்டுத் தொகையானது, மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்குட்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருடன் முதலீட்டினைப் பெறுபவரினால் திறக்கப்பட்டு பேணப்பட்டு வரும் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வரவு வைக்கப்படல் வேண்டும்.

(எ) குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்பட்ட பட்டியலிடப்பட்ட படுகடன் பிணையங்கள் அல்லது பட்டியலிடப்பட்ட பங்குகள் மீதான ஏதேனும் வருமானம் அல்லது முதிர்ச்சிப் பெறுகைகளை, மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்குட்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருடன் திறக்கப்பட்டு பேணப்பட்டு வரும் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கில் வைத்திருக்கப்படும் முதலீட்டைப் பெறுபவரின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களிலிருந்து மாத்திரம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(ஏ) முதலீட்டினைப் பெறுபவர், இது தொடர்பில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையினால் விடுக்கப்பட்ட விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் பின்பற்றுதல் வேண்டும்."

07-353

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.